தேதி : 26.11.2025

அசல் வழக்கு எண் : 121/2018

வாதி தரப்பு சாட்சி 2 : திரு.வரதராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் சுமாராக எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்துப் பார்த்தேன். அதிலுள்ள விவரங்களை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. தாவா சொத்தை இறந்து போன 1வது வாதி பசவராஜ் என்பவர் 2006 ம் ஆண்டு கிரயம் பெற்றார். அந்த கிரயப் பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் அதில் நான் கையெழுத்து போடவில்லை. அந்த கிரயப் பத்திரம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைக்கு கிரயம் வாங்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. பசவராஜ் அந்த சொத்தை விஜயம்மா என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். விஜயம்மாவும், பசவராஜும் கிரயம் பேசும் போது நான் உடன் செல்லவில்லை. விஜயம்மாவிடமிருந்து பசவராஜ் கிரயம் பெற்ற விவரத்தை பசவராஜ் சொல்லி தான் எனக்கு தெரியும். விஜயம்மா தாவா சொத்தை யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் பசவராஜ் உயிருடன் இருக்கும் போது தக்காளி மண்டி நடத்தி வந்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் அந்த தக்காளி மண்டியை அவர் நடத்தவில்லை. அவர் அதை நடத்துவதற்கு செல்வம், வெங்கடேஷ் என்பவருக்கு வாடகைக்கு விட்டிருந்தார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பசவராஜ் தக்காளி மண்டியை செல்வம், வெங்கடேஷ்க்கு நடத்த வாடகைக்கு விட்டதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். பசவராஜ் தக்காளி மண்டி முன்னால் நடத்தியதற்கு உரிமம் அல்லது சான்றிதழ் பெற்றுள்ளாரா எனக்கு தெரியாது. பசவராஜ் தாவா சொத்தில் தக்காளி

மண்டி நடத்தி வந்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சூளகிரியில் வசித்து வருகிறேன். என்னுடைய முழு விலாசத்தை நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நானும் என் பார்ட்னரும் சேர்ந்து 2009 ம் ஆண்டு பசவராஜிடம் சூப்பர் மார்க்கெட் கட்ட வேண்டி அணுகினோம். அவரும் எங்களுக்கு கொடுப்பதாக சொன்னார். நாங்கள் பேசிய 3வது நாளே நாங்கள் 2 லட்ச ரூபாய் முன்தொகை கொடுத்து மாதம் ரூ.30 ஆயிரம் வாடகை பேசி முடித்தோம். நான் தான் என் பார்ட்னருக்கும் முன்னால் நின்று பேசிக் கொடுத்தேன். அந்த சூப்பர் மார்க்கெட் என் பார்ட்னருக்காக நான் பேசினேன். அதற்காக குத்தகை பத்திரமோ அல்லது வாடகை பத்திரமோ பசவராஜ்க்கும், என் பார்ட்னருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டதா என்றால் 9 வருடத்திற்கு வாடகை பத்திரம் எழுதப்பட்டது. அந்த வாடகை பத்திரம் என் பார்ட்னர் கேசவனிடம் உள்ளது. என் பார்ட்னர் கேசவன் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாடகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. பசவராஜிடம் நானும், என் பார்ட்னர் சென்று சூப்பர் மார்க்கெட் வைக்க கேட்கவில்லை என்றாலும், என் பார்ட்னரும், பசவராஜ்ம் எந்த வாடகை ஒப்பந்தமும் போடவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பசவராஜை அணுகிய பிறகு 3வது நாள் நாங்கள் பூமி பூஜை போட்ட போது பிரதிவாதி கணேசன் தாவா சொத்தில் எதுவும் கட்ட கூடாது என்று ஆட்சேபணை செய்தார். பிரதிவாதி ஆட்சேபணை செய்யும் போது பசவராஜ்ம், என் பார்ட்னர் கேசவனும் நானும் இருந்தோம். நான் கணேசனிடம் எதற்காக தடங்கல் செய்கிறாய் என்று கேட்டோம். பிரதிவாதி கணேசன் தாவா சொத்து அவருடைய இடம் என்று சொல்லி தடங்கல் செய்தார். பசவராஜ் காவல் நிலையத்தில் கணேசன் மீது புகார் கொடுத்தார். போலீசார் இருவரையும் அழைத்து ஆவணங்களை கொண்டு வரசொல்லி அதை பரிசீலனை செய்து விசாரித்தார்கள். போலீசார் பசவராஜிடம் உரிமையியல்

நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி சொன்னார்கள். அதன் பிறகு தான் பசவராஜ் இந்த வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் நாங்கள் மீண்டும் சென்று பிரதிவாதி கணேசனிடம் பேசிப் பார்த்தோம். அவர் ஒத்து வராததால் பசவராஜ் இந்த வழக்கு தாக்கல் செய்தார். சுமார் ஒரு வாரம் கழித்து பிரதிவாதி கணேசன் தான் முதலில் வழக்கு தாக்கல் செய்தார். அதன்பிறகு பசவராஜும் வழக்கு தாக்கல் செய்தார். பசவராஜ் காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்த பிறகு கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் எல்லாம் சுமார் 15 நாட்கள் கழித்து இடத்தை அளந்தார்கள். அப்போது பசவராஜ் இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை. பசவராஜ் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் நிலத்தை அளந்து காட்டவில்லை என்றால் சரியல்ல. நானும் என் பார்ட்னரும் வழக்கறிஞரை சந்தித்து சட்ட கருத்துரை பெற்றதற்கு அந்த கருத்துரையை தாக்கல் செய்தோமா என்றால் நாங்கள் வாய்மொழியாக தான் கருத்துரை பெற்றோம். நாங்கள் கிருஷ்ணகிரியை சேர்ந்த வழக்கறிஞர் வெங்கடேசன் என்பவரை அணுகி தான் கருத்துரை கேட்டோம். நாங்கள் வழக்கறிஞர் வெங்கடேசனை பார்க்கவும் இல்லை, கருத்துரை கேட்கவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் வெங்கடேசன் தற்போது உயிரோடு இல்லைஎன்பதால் நான் இந்த வழக்கிற்காக கருத்துரை பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பசவராஜ் எப்போது செட் போட்டார் என்றால் எந்த வருடம் போட்டார் என்று எனக்கு தெரியாது. ஆனால் ஏற்கனவே அந்த செட் அங்கு இருந்தது. பசவராஜ் 2019 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக் கட்டளை பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பசவராஜ் வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்து காலியிடமாக காட்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி கணேசன் எதிராக பிறப்பிக்கப்பட்ட

இடைக்கால உறுத்துக்கட்டளைக்கு எதிராக அவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அது நிலுவையில் இருந்த போது பசவராஜ் செட் கட்டினார் என்றால் சரியல்ல. பசவராஜ் செட் கட்டியது மட்டும் எனக்கு தெரியும். அந்த செட்டில் தற்போதுள ன் பார்ட்னர் கேசவன் தான் சுவாதீனத்தில் உள்ளார். கேசவன் அந்த செட்டில் இருசக்கரவாகன நிறுத்தும் இடமாக பயன்படுத்தி வருகிறார். நான் தான் அந்த இருசக்கர வாகன நிறுத்தும் இடத்தை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு நான் நடத்தி வருவதாக சொல்லியிருந்தால் அது தவறு. பிரதிவாதி கணேசன் நிலத்திற்கான ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். பிரதிவாதி கணேசன் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. அவர் எந்த வருடம் கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. அவர் எவ்வளவு விஸ்தீர்ண இடம் கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கணேசன் பத்திரத்தில் அவருடைய சொத்தில் கட்டிடம் உள்ளதா அல்லது காலியாக உள்ளதா என்று நான் பார்க்கவில்லை. நான் பிரதிவாதி கணேசன் பத்திரத்தை பார்க்காமல் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கணேசனுக்கு சொந்தமான இடத்திற்கான கதவு எண் எனக்கு தெரியாது. ஆனால் அந்த இடத்தில் முத்தூட் பைனான்ஸ், பேக்கரி, ஜவுளி கடை, ஹோட்டல் ஆகியவை உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் 10 அடி தூரத்தில் பிரதிவாதி கணேசன் சொந்தமான நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் 10 அடி தூரத்தில் பிரதிவாதி கணேசன் நிலம் கிடையாது என்றாலும், அந்த நிலத்தில் முத்தூட் பைனான்ஸ், பேக்கரி, ஜவுளி கடை, ஹோட்டல் ஆகியவை கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் எந்த தேதியில் தாவா சொத்தை அளக்க வந்தார் என்றால் எனக்கு தேதி நியாபகமில்லை. அவர் ஒருமுறை தான் தாவா சொத்தை அளக்க வந்தார். நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்துப் பார்க்கவில்லை.

நீதிமன்ற ஆணையர் மீட்டர் எண்ணை பார்க்கும் போது நானும் அதை பார்த்தேன். அந்த மீட்டர் எண் எனக்கு நியாபகமில்லை. நான் நீதிமன்ற ஆணையர் வரும் போது நான் அவருடன் இருந்ததில்லை என்றாலும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் பார்த்ததாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பசவராஜ் எனக்கு 30-40 வருடங்களாக பழக்கம் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

SANTHOSH BASKAR

Digitally signed by SANTHOSH BASKAR
Date: 2025.11.26 15:37:04 +0530

Additional District Judge,
Hosur.